இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1993 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,
# கடற்படை (திருத்தச்) சட்டம்

*(1993, மார்ச் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1993, மார்ச் மாதம் 19 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 1.20 தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கடற்படை (திருத்தச்) சட்டம்.

[1993, மார்ச் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 53/89
3046

கடற்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின 11 ஆம் இலக்க, கடற்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்படைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"கிரமமான கடற்படை ஒதுக்குப் படை.

4. கிரமமான கடற்படை ஒதுக்குப்படை ஆனது, கிரமமான கடற்படையில் சேவையாற்றிய பின்னர் சனாதிபதியின் கட்டளைமூலம் அத்தகைய ஒதுக்குப் படைக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களான அலுவலர்களையும், அத்துடன் ஆட்களை சேர்க்கும் நியதிகளுக்கு இணங்க கிரமமான கடற்படையிலிருந்து அல்லது கிரமமான கடற்படையில் சேவையாற்றிய பின்னர் அத்தகைய ஒதுக்குப்படைக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களான கடலோடிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

"(2) அவரது ஆணையின் பதவி விலகலை சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பவரான கிரமமான கடற்படையின் அல்லது கிரமமான கடற்படை ஒதுக்குப்படையின் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர் —

(அ) கடற்படையின் ஆதனம் என்றவாறாக அவரது உடைமையில் உள்ள அத்தகைய எல்லா ஆதனங்களையும், உடுபுடைவைகளையும், நியமனங்களையும் (நியாயமான தேய்மானத்துக்கு மட்டும் விலக்களிக்கப்படும்) நல்ல நிலைமையில் விதித்துரைக்கப்பட்ட அலுவலரிடம் திருப்பிக் கொடுத்தும்; அத்துடன்

(ஆ) அவரது பதவிவிலகல் ஏற்கப்பட்டமை கசற்றில் அறிவிக்கப்பட்டும், இருக்கும் வரையில், அவரது நியமனத்தின் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுதலாகாது.".

(ஆ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(4) தொண்டர் கடற்படையின் அல்லது தொண்டர் கடற்படை ஒதுக்குப்படையின் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர், 3 ஆம் உட்பிரிவுக்கிணங்க, அவரது ஆணையின் பதவிவிலகல் பற்றி அறிவித்தல் கொடுத்திருக்குமிடத்து, கடற்படையின் ஆதனம் என்றவாறாக அவரது உடைமையில் உள்ள அத்தகைய எல்லா ஆயுதங்களையும் உடுபுடவைகளையும், நியமனங்களையும் (நியாயமான தேய்மானத்துக்கு மட்டும் விலக்களிக்கப்படும்) நல்ல நிலையில், குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்குத் திருப்பிக் கொடுக்கின்றதன்மேல்—

(அ) அவர் தீவிர சேவையில் இல்லாதிருப்பாரெனின், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பதவிவிலகலின் தேதியன்று, அல்லது

(ஆ) அவர் தீவிர சேவையில் இருப்பாரெனின் அத்தகைய சேவை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாக,

அவரது ஆணையைப் பதவிதுறப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், கடலோடி ஒருவர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு கடற்படைக்கு அல்லது இலங்கை அரசாங்கத்துக்குச் சேவை புரியவென பிணைமுறியொன்றை செய்துகொண்டுள்ளபோது, குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதி, விடயத்துக்கேற்றவாறு, ஆரம்ப ஆட்சேர்த்தல் காலப்பகுதிக்கு அல்லது மீளச்சேர்த்தல் காலப்பகுதிக்கு அப்பால் நீடிக்கும் நிகழ்வு எது எப்படியிருப்பினும், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையும் வரையில் அவர் கடற்படையில் சேவைபுரிதல் வேண்டும்."; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம்:—

"(3) கிரமமான கடற்படையின் அல்லது கிரமமான கடற்படை ஒதுக்குப்படைப் பிரிவு கடலோடியொருவர் கடற்படையின் ஆதனம் என்றவாறாக அவரது உடைமையிலுள்ள அத்தகைய எல்லா ஆயுதங்களையும் உடுபுடைவைகளையும் நியமனங்களையும் (நியாயமான தேய்மானம் மட்டும் விலக்களிக்கப்படும்) நல்ல நிலையில் விதித்துரைக்கப்பட்ட அலுவலரிடம் அவர் திருப்பிக் கொடுத்திருக்கும் வரையில் கடலோடி என்ற வகையில் அவரது கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுதலாகாது.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, "அத்தகைய படையிலிருந்து அல்லது ஒதுக்குப்படையிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கடற்படையின் ஆதனம் என்றவாறாக அவரது உடைமையிலுள்ள அத்தகைய எல்லா ஆயுதங்களையும் உடுபுடைவைகளையும் நியமனங்களையும் (நியாயமான தேய்மானம் மட்டும் விலக்களிக்கப்படும்) நல்ல நிலையில் விதித்துரைக்கப்பட்ட அலுவலரிடம் அவர் திருப்பிக் கொடுப்பதன் மீது அத்தகைய படையிலிருந்து அல்லது ஒதுக்குப்படையிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மீது இத்தால் திருத்தப்படு படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, "தவறு புரியப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குள் அல்லது அவ்வாள் அத்தகைய காலப்பகுதியில் இலங்கையில் இல்லாதிருந்திருக்குமிடத்து அவர் இலங்கைக்கு திரும்பிவந்தபின்னர் ஓராண்டிற்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் அல்லது அவ்வாள் அத்தகைய காலப்பகுதியில் இலங்கையில் இல்லாதிருக்குமிடத்து அவர் இலங்கைக்கு திரும்பி வந்த பின்னர் ஓராண்டுக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "அத்தகைய தவறு புரியப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்தபின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தபின்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவை அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவாக மீளவிலக்கமிடுவதன்மூலமும் ;

(ஆ) மீளவிலக்கமிடப்பட்ட (2) ஆம் உட்பிரிவில் "கொலைக்குற்றமாகாத கடற்படைத் தவறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொலைக்குற்றமாகாத தவறு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) மீளவிலக்கமிடப்பட்ட (2) ஆம் உட்பிரிவுக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1) லெப்டினென் தரத்தைச் சேர்ந்த அல்லது அத்தரத்திற்குக் குறைவான அலுவலரொருவர், படை நீதிமன்றம் ஒன்றினால் விளங்கப்படவேண்டுமென்று இச்சட்டத்தால் வெளிப்படையாக தேவைப்படுத்தப்பட்ட தவறொன்று அல்லாத கொலைக்குற்றமாகாத தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து, கடற்படை ஏவுநர் அல்லது கடற்படை ஏவுநரால் அதற்கென அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான கப்ரன் தரத்திற்குக் குறையாத அலுவலரொருவர், குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் அவர் சுருக்கமுறையில் கையாளப்பட விரும்புகின்றாரா அல்லது படை நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப்பட விரும்புகின்றாரா என அவரைக் கேட்டல் வேண்டும் என்பதுடன், குற்

றஞ்சாட்டப்பட்டவர், படை நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப் படவேண்டுமென தெரிந்தெடுத்தால், படை நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்; குற்றஞ்சாட்டப்பட்டவர் சுருக்கமுறையில் கையாளப்பட வேண்டுமெனத் தெரிந்தெடுத்தால் குற்றஞ்சாட்டப்பட்டவரை சுருக்கமுறையில் கையாள நடவடிக்கையெடுக்கலாம்:

ஆயினும், எவ்வாறாயினும், அத்தகைய அலுவலர் எந்தத் தண்டனையை விதிக்கத் தத்துவமுடையவராக் இருக்கின்றாரோ அந்தத் தண்டனையானது, முதுமுறையை இழத்தலாதல் அல்லது தண்டனை அளவுகளில் கடுமை குறைந்த ஏதேனும் தண்டனையாதல் வேண்டும்.".

(ஈ) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலம்:—

"ஏவுநர் அல்லது ஏவுகை அலுவலர்களினால் தவறுநர்கள் சுருக்கமுறையாக விளங்கப்படுதல்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"சிறு உத்தியோகத்தர் அல்லது எழுத்தாணை பெற்ற உத்தியோகத்தராக இருக்கின்ற தவறாளர் படை நீதிமன்றத்தினால் அல்லது சுருக்க முறையாக விளங்கப்படுவதற்குத் தெரிவு செய்வதற்குள்ள உரிமை.

29. ஒழுக்காற்றுத் தவறென்று அல்லது படை நீதிமன்றத்தினால் விளங்கப்படவேண்டுமென சட்டத்தினால் வெளிப்படையாகத் தேவைப்படுத்தப்பட்ட தவறென்று தவிர்ந்த கொலைக்குற்றமாகாத தவறென்றுக்கு எழுத்தாணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது சிறு உத்தியோகத்தர் குற்றஞ்சாட்டப்பட்டவிடத்து, அவரது ஏவுநர் அலுவலர் அவர் சுருக்கமுறையாக விளங்கப்பட விரும்புகின்றாரா அல்லது படை நீதிமன்றத்தினால் விளங்கப்பட விரும்புகிறாரா என அவரிடம் கேட்டல் வேண்டும். அவர் படை நீதிமன்றத்தால் விளங்கப்பட வேண்டுமென விருப்பம் தெரிவித்தால் படை நீதிமன்றத்தால் அவர் விளங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "லெப்டினன் ஏவுநர் தரத்திற்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள" எனும் சொற்களுக்குப் பதிலாக "கப்டன்" தரத்திற்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :— 

சட்டவாக்கத் முதன்மைச் தின் 35ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் "படை நீதிமன்றத்தின் தலைவர் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படை நீதிமன்றத்தின் தலைவர் பெயர் குறிப்பிடப் படுதல் வேண்டும். அத்துடன் படை நீதிமன்றத்தின் ஏனைய உறுப்பினர் படை நீதிமன்றத்தை நடத்தக் கட்டளையிடுகின்ற அதிகாரியினால் பெயர் குறிப்பிடப்படலாம்." எனும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவில் "அப்படை நீதிமன்றத்தில் தலைமை வகிப்பதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்" எனும் சொற்களுக்குப் பதிலாக "அப்படை நீதிமன்றத்தில் தலைமை தாங்குவதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர், படை நீதிமன்றத்தை நடத்தக் கட்டளையிடுகின்ற அதிகாரியினால் ஏனைய உறுப்பினர்கள் பெயர் குறிப்பிடப்பட்டாலொழிய" எனும் சொற்களை இடுவதன்மூலம்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத் தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) "ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக" எனும் சொற்களுக்குப் பதிலாக "1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட பகிரங்க விடுமுறை நாட்கள் நீங்கலாக" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய காப்பு வாசகத்தினைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் படை நீதிமன்றத்தின் எவையேனும் நடவடிக்கைகளின் செல்லுபடி, ஒரு பகிரங்க விடுமுறை நாளில் அது நடாத்தப்பட்டதென்ற காரணத்தால் மாத்திரம் பாதிக்கப்படுதல் ஆகாது.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது, அதன் (1)ஆம் உட்பிரிவில் "விதித்துரைக்கப்படக்கூடியவாறாக எழுபத்திரெண்டு சொற்கள் கொண்ட ஒவ்வொரு பக்கத்திற்கும் பத்து சதத்திற்கும் மேற்படாத" எனும் சொற்களுக்குப் பதிலாக "விதித்துரைக்கப்படக் கூடியவாறான" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில் "அனுமதியின்றி வருகைதராதிருக்கும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதியின்றி வருகைதராதிருக்கும் அல்லது முறைமையற்ற முறையில் தமது கப்பலை அல்லது கடமையிடத்தைவிட்டுச் செல்லும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவானது "அனுமதியின்றி வருகைதராதிருக்கும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதியின்றி வருகைதராதிருக்கும் அல்லது முறைமையற்ற முறையில் தமது கப்பலை அல்லது கடமையிடத்தை விட்டுச் செல்லும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "தமது உயர்நிலை அலுவலருக்கெதிராக, அத்தகைய உயர்நிலை அலுவலர்" எனும் சொற்களுக்குப் பதிலாக "கடல்சார் சட்டத்திற்கமைந்த வேறு எவரேனும் ஆளுக்கு எதிராக, அத்தகைய வேறு ஆள்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "உயர்நிலை அலுவலரை" எனும் சொற்களுக்குப் பதிலாக "கடல்சார் சட்டத்திற்கமைந்த எவரேனும் ஆளை" எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 69ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "தமது உயர்நிலை அலுவலரின் ஏதேனும் சட்டபூர்வ ஆணைக்கு கீழ்படிய மறுக்கின்ற அல்லது தமது உயர்நிலை அலுவலருக்கு அச்சுறுத்தும் அல்லது பழித்துரைக்கும் மொழியைப் பயன்படுத்துகின்ற அல்லது அவமரியாதையாக நடந்துகொள்கின்ற" எனும் சொற்களுக்குப் பதிலாக "தமது உயர்நிலை அலுவலருக்கு அல்லது 24 ஆம் பிரிவின்கீழ் தமது கடமையைப் புரிகையில் கீழ்நிலை அலுவலரின் சட்டபூர்வ ஆணைக்குக் கீழ்ப்படிய மறுக்கின்ற அல்லது தமது உயர்நிலை அலுவலருக்கு அல்லது 24 ஆம் பிரிவின் கீழ் தமது கடமையைப் புரிகையில் கீழ்நிலை அலுவலருக்கு அச்சுறுத்தும் அல்லது பழித்துரைக்கும் மொழியைப் பயன்படுத்துகின்ற அல்லது அவமரியாதையாக நடந்து கொள்கின்ற" எனும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "உயர்நிலை அலுவலருக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "உயர்நிலை அலுவலருக்கு அல்லது கீழ்நிலை அலுவலருக்கு" எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியில் உள்ள "மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு அப்பிரிவில் உள்ள "மூன்றாண்டுகளுக்குக் குறையாத கடூழிய மறியற்றண்டனையால் அல்லது தண்டனையளவுகளில் கடுமை குறைந்த தண்டனையால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்றாண்டுகளுக்குக் குறையாத கடூழிய மறியற்

றண்டனையினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "கடற்படையின் பயன்பாட்டுக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடற்படையினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை அசட்டையாக இழக்கின்ற அல்லது அதில் குறைப்பை ஏற்படுத்துகின்ற";

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியில் "ஊறு செய்கின்ற" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஊறு செய்கின்ற அல்லது அழிக்கின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "அத்தகைய படைகளுக்கு ஊறுவிளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய படைகளுக்கு ஊறுவிளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதான அல்லது அத்தகைய படைகளுக்கு ஊறு விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியத்தை கொண்டுள்ளதான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவை அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஆயின், எவ்வாறாயினும், அணிவகுப்பின்போது, அணிவகுத்துச் செல்லலின்போது, விழாவின்போது அல்லது வேறு சேவை விழாவின்போது அத்தகைய தவறாக அமைகின்ற செயல், நடத்தை, ஒழுங்கீனம் அல்லது அசட்டை அத்தகைய ஆளினால் புரியப்பட்டால், அவர் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான கடூழிய மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(இ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) இச்சட்டத்தின் கீழ் வேறோர் ஆள் தவறொன்றைப் புரிவதற்கு உதவி செய்கின்ற, உடந்தையாகவிருக்கின்ற, ஆலோசனை கூறுகின்ற அல்லது செய்விக்கின்ற, கடற்படைச் சட்டத்திற்கு அமைந்தவரான ஒவ்வோர் ஆளும், தவறொன்றுக்

குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் முதலாவதாக கூறப்பட்ட தவறின் விளக்கத்திற்கென குறித்துரைக்கப்பட்ட விதத்தில் விளங்கப்படுதலும் வேண்டும். அத்துடன் முதலிற் உறப்பட்ட தவறொன்றுக்காகக் குறித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான கடூழிய மறியற்றண்டனையால், அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "கடலோடி ஒருவராக அவரது ஆட்சேர்ப்புக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அலுவலர் ஒருவராக அவரது நியமனத்துக்கான அல்லது கடலோடி ஒருவராக அவரது ஆட்சேர்ப்புக்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அனுமதி இன்றி வருகை தராதிருக்கச் செய்விக்கின்ற அல்லது தூண்டுகின்ற அல்லது எவரேனும் அலுவலர் அல்லது கடலோடி கைவிட்டு செல்லச் செய்விப்பதற்கு அல்லது அனுமதி இன்றி வருகை தராதிருக்கச் செய்விப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு எத்தனிக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராதிருக்கச் செய்விக்கின்ற அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச்செல்ல செய்விக்கின்ற அல்லது தூண்டுகின்ற அல்லது எவரேனும் அலுவலர் அல்லது கடலோடி கைவிட்டுச் செல்ல செய்விப்பதற்கு அல்லது அனுமதியின்றி வருகை தராதிருக்கச் செய்விப்பதற்கு அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் செல்லச் செய்விப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு எத்தனிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "கைவிட்டுச் செல்ல அல்லது அனுமதி இன்றி வருகைதராதிருக்கவுள்ளார் என அறிந்துகொண்டு அவர் அவ்வாறு கைவிட்டுச் செல்ல அல்லது அனுமதியின்றி வருகை தராதிருக்க அவருக்கு உதவும் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கைவிட்டுச் செல்ல அல்லது அனுமதி இன்றி வருகை தராதிருக்க அல்லது முறைமையற்ற முறையில் கைவிட்டுச் செல்ல உள்ளார் என அறிந்துகொண்டு அவ்வாறு கைவிட்டுச் செல்ல அல்லது அனுமதி இன்றி வருகை தராதிருக்க அல்லது முறைமையற்ற முறையில் கைவிட்டுச் செல்ல உதவும், அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அல்லது அனுமதி இன்றி வருகைதராதவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது அனுமதி இல்லாமல் வருகைதராதவர் அல்லது, முறைமையற்ற முறையில் விட்டுச்சென்றவர்" என்னும் சொற்களையிடுவதன் மூலமும்,

(ஈ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "அனுமதி இன்றி வருகைதராதிருக்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதி இன்றி வருகைதராதிருக்க அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச்செல்ல" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "அடகு வைக்குமாறு அல்லது கொடுத்து விடுமாறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அடகு வைக்குமாறு அல்லது கொடுத்து விடுமாறு அல்லது அழிக்குமாறு அல்லது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியில், "அடகுவைத்தலில் அல்லது இல்லாமற் செய்தலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அடகுவைத்தலில், அழித்தலில் அல்லது இல்லாமற் செய்தலில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "அண்மையிலுள்ள குடியியல் நீதிமன்றத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அண்மையிலுள்ள வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும். முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) இறப்பு;

(ஆ) கடூழிய மறியற்றண்டனை;

(இ) கடற்படையிலிருந்து அவமதிப்புடன் பதவியகற்றல்;

(ஈ) சாதாரண மறியற்றண்டனை;

(உ) கடற்படையிலிருந்து அவமதிப்பில்லாமல் பதவியகற்றல்;

(ஊ) தடுப்புக் காவலில் வைத்தல்;

(எ) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திற்கு அல்லது வேறுவகையாக, அலுவலர் ஒருவர் என்ற வகையில் முதுமுறையைப் பறிமுதல் செய்தல்;

(ஏ) கீழ்நிலை, எழுத்தாணைபெற்ற, அல்லது சிறு அலுவலர்களை பதவி இறக்குதல்;

(ஐ) செலுத்தப்படவேண்டிய சம்பளப் படியையும், வேறு வேதனத் களையும், தவறுளிக்கு வழங்கப்பட்ட பதக்கங்களையும் ஏனை பட்டிகளையும் அவற்றுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டதை, அத்துடன் கைவிட்டுச்செல்லும் சந்தர்ப்பத்தில் கப்பலிலிருந்து அல்லது அவர் எந்த இடத்திலிருந்து, கைவிட்டு வெளியேறுகிறாரோ அந்த இடத்திலிருந்து கைவிட்டுச் செல்ல வரினல், விட்டுச் செல்லப்பட்ட எல்லா உடைகளையும் அவரின் உடைமைப்பொருட்களையும் பறிமுதல் செய்தல்;

(ஒ) கடுமையான கண்டனம்;

(ஓ) கண்டனம்;

(ஔ) விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய சிறுதண்டனை கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1)ஆம் பந்தியில், "அனுமதி இன்றி வருகை தராதவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராதவர் அல்லது முறைபற்ற விதத்தில் விட்டுச்சென்றவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (2)ஆம் பந்தியில் "அனுமதி இன்றி வருகை தராதவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராதவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பில், "அனுமதி இன்றி வருகை தராதவர்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராதவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றவர்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "அனுமதி இன்றி வருகை தராதவரான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அனுமதி இன்றி வருகை தராதவரான ஒருவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றவரான" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(ஆ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அனுமதி இன்றி வருகை தராத ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராத ஒருவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச்சென்ற ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அனுமதி இன்றி வருகை தராத ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராத ஒருவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச்சென்ற ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பிரிவின் பந்தி (ஆ) வின் (i) ஆம் உட்பிரிவில், "அனுமதி இன்றி வருகை தராத ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதி இன்றி வருகை தராதவர் அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றிருக்கின்ற ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(உ) அப்பிரிவின் பந்தி (ஆ)வின் (ii)ஆம் உட்பந்தியில், "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக, அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றிருக்கின்ற ஒருவராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஊ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக, அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச்சென்றுள்ளவர் ஒருவராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(எ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக இருக்குமிடத்து அவர் எப்பொலிசு நிலையத்துக்குக் கொண்டுவரப்படுகின்றாரோ, அப்பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலர் அவ்விடயம் பற்றி உடனடியாக விசாரணை செய்தல் வேண்டும், அத்துடன், அத்தகைய அலுவலரினது அல்லது கடலோடியினது குற்ற ஒப்புதல் இருந்து அவர் விட்டுச் சென்ற ஒருவர் அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவர் என அவருக்குத் தோன்றினால், அவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவராக அல்லது முறைமையற்ற முறையில் விட்டுச் சென்றிருக்கின்ற ஒருவராக இருக்குமிடத்து, அவர் எப்பொலிசு நிலையத்துக்குக் கொண்டு வரப்படுகின்றாரோ, அப்பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலர் விடயம்பற்றி உடனடியாக விசாரணை செய்தல் வேண்டும், அத்துடன், அத்தகைய அலுவலரினது அல்லது கடலோடியினது குற்ற ஒப்புதலில் இருந்து அவர் கைவிட்டுச் சென்ற ஒருவர் அல்லது அனுமதி இன்றி வருகை தராத ஒருவர் அல்லது முறைமையற்ற முறையில் கைவிட்டுச் சென்றிருக்கின்ற ஒருவர் என அவருக்குத் தோன்றினால், அவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "குடியியல் நீதிமன்றம்", "அமைச்சர்", "கடலோடி", "மேதகு அலுவலர்" என்னும் வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை இடுவதன் மூலம் :—

"குடியியல் நீதிமன்றம்", என்பது, அரசியலமைப்பின் கீழ் அல்லது பாராளுமன்றத்தின் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றம் எனப் பொருள்படும்";

"அமைச்சர்" என்பது, பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்";

"கடலோடி" என்பது, அலுவலர் அல்லாத கடற்படையின் ஓர் உறுப்பினர் எனப்பொருள்படும் என்பதுடன், பெண் மாலுமி ஒருவரையும் இது உள்ளடக்கும்";

"மேதகு அலுவலர்" என்பது, எவரேனும் அலுவலரை, எழுத்தாணை பெற்ற அலுவலரை அத்துடன் சிறுநிலை அலுவலரை உள்ளடக்கும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் ;

"எழுத்தாணை பெற்ற அலுவலர்" என்பது, தலைமை பிரதான சிறு அலுவலர் அல்லது கடற்படை பிரதான சிறு அலுவலர் எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் பொதுவான திருத்தங்கள்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் எங்கேனும் "நிரந்தரச் செயலாளர்" என்னும் சொற்கள் வருகின்ற இடங்களிலெல்லாம், "செயலாளர்" என்னும் சொல் பதிலிடப்படல் வேண்டும்.

ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

34. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.